# இன்று புனித சனி

# இரண்டாவது திருவழிபாடு ஆண்டு

# 2024-03-30

(*இன்றைய வாசகங்கள்:*

*தொடக்க நூலிலிருந்து வாசகம்.* 1: 1-2:2,

*பதிலுரைப்பாடல். திபா.* 118: 1-2,16-17, 22-23,

*விடுதலைப் பயண நூலிருந்து வாசகம்.* 14: 15- 15:1,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 16: 1-8)

## திருப்பலி முன்னுரை

*நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக. அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று புனித சனி. நம் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பை இன்று நாம் நினைவு கூருகின்றோம். தமது திருப்பாடுகளாலும், சிலுவை மரணத்தாலும் பாவத்தை அழித்து மரணத்தை முறியடித்தவர் மாபரன் இயேசுக் கிறிஸ்து. இறைவனின் மகிமையை எதிர்த்து நிற்கவோ, தடுத்துப் பார்க்கவோ எந்தச் சக்தியாலும் முடியாது என்பதைத்தான் இயேசுவின் உயிர்ப்பு நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இந்த உயிர்ப்பின் மகிமையில் நாமும் பங்குபெற அழைக்கப்படுகின்றோம் என்பதை உணர்ந்து பெரு மகிழ்ச்சியுடனும், நன்றி உணர்வுடனும் பாஸ்காத் திருவிழிப்பு சடங்கினில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*வாழ்வின் நாயகனே இறைவா!*

*திருஅவையின் ஞானவழிகாட்டிகள் அனைவரும் உயிர்த்த உம் திருமகனின் அருளினால் திருஅவையினை சாட்சிய வாழ்வுக்கு இட்டுச் செல்ல இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*ஒளியின் இறைவா!*

*உயிர்ப்பு விழா கல்வாரிப் பலியில் பங்கேற்கும் நாம் அனைவரும் எமது கிறிஸ்தவ வாழ்வின் ஆதாரம் "கிறிஸ்துவின் உயிர்ப்பு" என்பதை எப்போதும் மறந்து விடாமல் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*உலகின் மீட்பரே இறைவா!*

*உமது திருமகனின் உயிர்ப்பின் செய்தி கிடைக்கப் பெறாத உமது பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையில் அவர்களையும் நீர் ஆட்கொண்டு ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*இரக்கமுள்ள இறைவா!*

*எம் வாழ்வில் எதிர்கொள்ளும் சோதனைகளையும், சவால்களையும் உறுதியுடன் எதிர்கொண்டு, உயிர்த்த உம் திருமகனின் சாட்சிகளாக வாழ்ந்திட எமக்கு வலிமையும், மன உறுதியும் அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*உலகின் ஒளியே இறைவா!*

*பாஸ்கா என்றாலே கடத்தல் என்பதை உணர்ந்து, எங்களது பழைய பாவ இயல்புகளில் இருந்து கடந்து உம் அன்பின் சிறகுகளுக்குள் தஞ்சம் அடையவும், நம்பிக்கை அன்பு, அருள் போன்ற பாஸ்கா விழாவின் கனிகளை நிரம்ப பெற்று வாழ்ந்திடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*இரக்கம் காட்டுபவரே இறைவா,*

*உம்மோடு திருமுழுக்கிலே ஒன்றித்து, அதனை இன்று புதுப்பித்த நாங்கள் பெற்ற அருளுக்கேற்ற வாழ்க்கை நடத்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்*

*இறைவா*

*உயிர்ப்பை கொண்டாடி மகிழுகின்ற நாங்கள் உயிர்ப்பு தரும் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பினை உணர்ந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*வழிநடத்தும் இறைவா!*

*கலகங்கள், போர்கள், வன்முறைகள் ஓய்ந்து உறவிலும், உண்மை அன்பிலும் நாங்கள் எல்லாரும் உயிர்க்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*